

இலக்கியத் தூறல்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in
ISBN 978-81-2343-815-3
9788123438153
இலக்கியத் தூறல்
தொகுப்பாசிரியர்
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

Language: Tamil

**Elakkiya Thooral**

Compiled by: **Prof. R.Vishnupriya**
**Thamizh Department**
**N.G.M.College, Pollachi.**

First Edition: November, 2018
Second Edition: June, 2019
Copyright: Publisher
No. of pages: 76
Publisher:
**New Century Book House Pvt. Ltd.,**
41-B, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 098.
Tamilnadu State, India.
Email : info@ncbh.in
Online:www.ncbhpublisher.in
ISBN: 978 - 81 -2343-815-3
Code No. A 4040
**₹ 55.00**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990, **Madurai** 0452 2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 0434-3234387 **Ooty** 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Thiruvannamalai** 04175-223449

**இலக்கியத் தூறல்**

தொகுப்பாசிரியர் : முனைவர் **இரா.விஷ்ணுப்பிரியா**
தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம்., கல்லூரி, பொள்ளாச்சி.

முதல் பதிப்பு: நவம்பர், 2018
இரண்டாம் பதிப்பு: ஜூன், 2019

*அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,*
*16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14*
**☎: 044 - 28482441**

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

# பொருளடக்கம்


1. பாரதி கண்ட கல்வி — 7
டாக்டர் ந.சுப்புரெட்டியார்

2. தொல்காப்பியம் காட்டும் மெய்ப்பாடுகள் — 16
முனைவர் இரா.ஜெயந்தி

3. சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிர்களின் வாழ்வியல் — 23
முனைவர் செல்வராஜ் ஜமுனா

4. பன்னிரு திருமுறைகளால் விழையும் அறங்கள் — 28
முனைவர் ந.பிரகாஷ்

5. துறவி தந்த கலைகள் — 34
முனைவர் பா.அருள்ஜோதி

6. மாணிக்கவாசகரின் பக்தி நெறி — 41
முனைவர் ந. ஜெயசுதா

7. அப்துல்ரகுமான் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் — 48
முனைவர் த.கீதாஞ்சலி

8. 'எரியும் பனிக்காடு' உணர்த்தும் தேயிலைத் தோட்ட வரலாற்றுப் பின்னணி — 56
முனைவர் த.பரமேஸ்வரி

9. நாட்டுப்புறவியலும் நம்பிக்கைகளும் — 63
முனைவர் ச.முத்துவேல்

10. கலைச்சொல் பயன்பாட்டு நிலை — 71
முனைவர் மு.சுகந்தி

# 3

# சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிர்களின் வாழ்வியல்

முனைவர் செல்வராஜ் ஜமுனா

வாழ்வியல் அடிப்படையில் உலக உயிர்களை இரு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். அவை உயர்திணை, அஃறிணை. ஆறறிவு பெற்ற உயிர்கள் எல்லாம் உயர்திணை. அறிவில் குறைந்த ஏனைய உயிர்களும் உயிர் இல்லாதனவுமாகிய பொருள்களும் அஃறிணை. அஃறிணை என்ற சொல்லாக்கம் கூட வியப்பிற்குரியது.

உலக வழக்கப்படி உயர்வு என்றால் தாழ்வு என்றுதான் எதிர்ப்பதம் கொள்ள வேண்டும். ஆனால் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் உயர்திணை என்று சொல்லிவிட்டு அதற்கு எதிர்ப்பதமாக தாழ்திணை என்று சொல்லாமல், அஃது அல்லாத திணையையும் கூட அஃறிணை என உயர்வுபடுத்தியுள்ளார். இதிலிருந்தே அஃறிணைக்கு இருக்கும் சிறப்பு புலனாகிறது. உயர்திணையான மனிதர்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு அஃறிணை உயிரினங்களுக்கு உண்டு என்ற சிந்தனைத் தேடல் தான் இக்கட்டுரை.

மனதில் அன்பின்றி வாழும் வாழ்க்கை, வளமற்ற பாலை நிலத்தில் பட்டுப்போன மரம் மீண்டும் தளிர்த்தது போன்றது என்பதை,

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று"

(குறள். 78)

என்பார் வள்ளுவர். பட்ட மரத்தின் தளிர் யாருக்கும் பயன்படுவதில்லை. அது போலவே இன்று மனதில் அன்பில்லாத மனிதர்களும் பிறருக்குப் பயனின்றி வாழ்ந்து வருகிறார்கள்.

சங்க இலக்கியப் பாக்களில் தலைவன், தலைவி இடையேயான அன்பினைப் புலப்படுத்தவும், குடும்ப வாழ்வின் மேன்மையை விளக்கவும், பிரிவின் வழி ஆற்றாமை புலப்படத் தலைவி பேசுமிடத்தும் விலங்குகளின் அன்பே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் வழி விலங்குகளிடமிருந்தும் அன்பினை மனிதர்கள் கற்றுணர வேண்டும் எனப் புலவர்கள் கருதியமை உணரலாம்.

### மகன்றில் பறவையின் அன்பு

சங்க காலத்தில் மக்கள் அஃறிணை உயிர்களுடன் இயைந்து வாழ்ந்துள்ளனர். அதனால்தான் சங்ககாலப் புலவர்களால் மக்களுக்கும் அஃறிணை உயிர்களுக்கும் இடையே நிகழும் உணர்வியல் உறவுகளையும், சிந்தனைகளையும் எடுத்தாள முடிந்துள்ளது. "குறிப்பிட்ட ஓர் இயற்கைக் காட்சியுடன் குறிப்பிட்ட மனித அனுபவம் பிணைக்கப்பட்டுள்ளது" (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.34) என மு.வ. குறிப்பிட்டுள்ளதன் வழி ஒரு மனிதனின் அனுபவம் இயற்கையுடன் ஒன்றியது என்பது பெறப்படுகிறது.

பறவைகளின் செயல்பாடுகள் மக்கள் மனதிற்கு இதம் தருவதாகவும், மனக் கவலைகளை எடுத்துரைக்கும் வாயில்களாகவும் அமைந்துள்ளன. தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி, தலைவனைப் பிரிந்திருப்பதை விட ஒன்றாக இருந்து உயிர் விடுதல் நன்று என்று தன் ஆற்றாமையைக் கூறுமிடத்து தனக்கும் தலைவனுக்குமான அன்பு மிகுதியைப் புலப்படுத்த மகன்றில் பறவையை சான்றுக்கு இழுக்கிறாள்.

ஒரு பூவானது இடைப்பட்டாலும் பல ஆண்டுகள் கழிந்தது போல பிரிவு தாங்க முடியாமல் உயிர் போய்விட்டது போல் எண்ணுமாம் நீரில் வாழும் மகன்றில் பறவை. அப்பறவைகளின் அன்பினை,

"பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீருறை மகன்றில் புணர்ச்சி போல" (குறுந்.57)

என்ற வரிகள் விளக்குகின்றன. மகன்றில் பறவைகள் இணைபிரியாமல் வாழும் தன்மை உடையன. எனவே இப்பறவை பிரியாமல் வாழும் காதலருக்கு உவமையாக்கப்படுகிறது. தானும் தலைவனைப் பிரியாமல் வாழ வேண்டும் என்று எண்ணிய தலைவி இப்பறவையை தன் கூற்றின் வாயிலாக முன்வைக்கிறாள்.

### மானின் அன்பு

பாலை நிலம் நீரற்று வெப்பம் மிகுந்தது. அங்குள்ள மரத்தின் பட்டையை ஆண்மான் தன் காலால் உதைத்துத்தள்ளி அதனைத் தன் குட்டி உண்டபின் எஞ்சியதைத் தான் உண்டது. மேலும் தனது குட்டிக்கு அம்மானே நிழலாகி நின்றது (குறுந்.213). மேலும் அப்பாலை நிலக் காட்டு வழியில் நிழல் இல்லாமல் வருந்திய தன் பெண் மானுக்குத் தான் நின்று தனது நிழலினைத் தந்து காத்தது என்பதை,

"இன்நிழல் இன்மையின் வருந்திய மடப்பிணைக்குத்
தன்நிழலைக் கொடுத்து அளிக்கும் கலை" (கலித்.11)

என்னும் வரிகள் விளக்குகின்றன. இப்பாடல் ஆண்மானின் குடும்பப் பாங்கினையும் அன்பு மிகுதியினையும் வெளிப்படுத்துகிறது.

மாறன் பொறையனார் ஐந்திணை ஐம்பதில் கணவன், மனைவி எவ்வாறு விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்று நயம்படக் கூறியுள்ளார். இதனை

"சுனைவாய்ச்சிறு நீரை எய்தாது என்று எண்ணிப்
பிணைமான் இனிது உண்ண வேண்டிக் கலைமா தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர், காதலர்
உள்ளம் படர்ந்த நெறி"

(பாலை - 38)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

பாலை நிலத்தில் தாகம் தீர்க்க நீர் வேண்டி ஆண்மானும், பெண் மானும் வருகின்றன. சுனையில் ஒருமான் அருந்துவதற்கு மட்டுமே சிறிது நீர் உள்ளது. ஒன்றை விட்டு மற்றொன்று நீரை அருந்த மனமில்லை. பெண்மான் நீர் அருந்தட்டும் என்று ஆண்மானும், ஆண்மான் அருந்தட்டும் என்று பெண்மானும் நிற்க, ஆண்மான் கொஞ்ச நேரம் பொறுத்துப் பார்த்து நீரண்டை சென்றது. அதைக்கண்டு பெண்மானும் சென்றது.

ஆண்மான் தண்ணீரில் வாய் வைத்து நீர் அருந்துவதுபோல் பாசாங்கு செய்து, தண்ணீர் முழுவதையும் பெண் மானே குடிக்கும்படி செய்தது. பெண்மையைப் பேணுவதில் விலங்குகள் மனிதர்களுக்கு மேல் என்பதை இந்நிகழ்வு புலப்படுத்துகிறது.

இல்லற வாழ்வில் தலைவனும் தலைவியும் சேர்ந்து நடத்தும் இல்லற மேன்மையைக் கண்டு வந்த செவிலி அதனை நற்றாயிடம் விளக்குமிடத்து,

"மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வன் நடுவணன் ஆக நன்றும்
இனிது மன்றவர் கிடக்கை...."

(ஐங்.401)

என்கிறாள். மான் குட்டியை இடைவிட்டு ஆண்மானும், பெண்மானும் இருபுறம் கிடந்தது போல, தலைவன், தலைவி புதல்வனின் கிடக்கை இருந்தது என்று கூறி இவர்களது இல்லற மேன்மையை வியக்கிறாள் செவிலி.

## குரங்கின் அன்பு

கூரிய கண்களையும் தாவுதலையும் உடைய ஆண்குரங்கு இறந்ததை அறிந்து பெண் குரங்கு பிரிவுத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள

இயலாமல் மரமேறுதல் தொழிலைக் கல்லாத தன் குட்டியினைத் தன் சுற்றத்திடம் ஒப்படைத்து உயர்ந்த மலைப்பக்கம் சென்று அங்கிருந்து தாவிக் குதித்து உயிரை மாய்த்துக் கொண்டது (குறுந்.69). இப்பாடலின் வழி பெண் குரங்கின் அன்பும் கற்பும் புலனாகிறது.

உயர்ந்த மலைப்பகுதியில் உள்ள மரத்தின் மீது ஆண்குரங்கு ஏறி, அதில் உள்ள இனிய பழங்களை உதிர்த்து பெண் குரங்கிற்கும் குட்டிகளுக்கும் உண்ணக் கொடுத்து அவற்றின் பசியைப் போக்கியது (குறுந்.278). இதனால் ஆண்குரங்கினது குடும்பம் மீதான அன்பும் அக்கறையும் புலனாகிறது.

**அன்னப் பறவையின் அன்பு**

பல வண்ண மலர்கள் நிறைந்த நீர்நிலையில் ஆண் அன்னத்துடன் பெண் அன்னம் விளையாடுகையில் ஒரு தாமரை இலை ஆண் அன்னத்தை மறைக்க, அதனைக் காணாமல் பெண் அன்னம் கலங்கியதை,

> "மணி நிற மலர்ப் பொய்கை மகிழ்ந்து ஆடும் அன்னம்தன்
> அணிமிகு சேவலை அகல்அடை மறைந்தென
> கதுமென காணாது கலங்கி அம்மடப்பெடை"

(கலித்.70)

எனும் பாடலடிகள் விளக்குகின்றன. இதில் அன்னப் பறவைகளின் பாசம் வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது.

**பசுவின் அன்பு**

புலியிடம் அகப்பட்டுக் கொண்ட மானின் கன்றுக்கு முதிய பசு ஒன்று தன் கன்றாக நினைத்துத் தன் பாலைக் கொடுத்தது.

> "புலிப்பாற் பட்ட ஆமான் குழவிற்குச்
> சினங்கழி மூதாக் கன்று மடுத்து ஊட்டும்"

(புறம். 323)

எனும் வரிகளில், தன் கன்றைத் தவிர பிறவற்றுக்குப் பால் சுரக்காத பசுவானது மான் கன்றுக்குத் தன் பாலைக் கொடுத்த அன்பு புலப்படுகிறது.

**யானையின் அன்பு**

புலிக்கு அஞ்சிய பெண்யானை விரைந்து செல்ல இயலாத நடையை உடைய தன் கன்றைக் காத்து நின்றது என்பதை,

"குறு வரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்று காத்து அல்கும்"

(நற்.85)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. இப்பாடலின் வழி தாய் யானை தன் கன்றின் மீது கொண்டுள்ள அக்கறை உணர்வும், தாய்மைப் பண்பும் புலனாகிறது.

யானைக் கன்றுகள் கலக்கிய சிறிதளவு நீரையும் முதலில் தன் பெண் யானையை உண்ணும்படி செய்து பின்பு களிறு தான் உண்ணும் என்பதை,

"துடிஅடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடி ஊட்டிப் பின் உண்ணும் களிறு"

(கலி.11)

என்ற பாடலில் கூறி ஆண் யானையின் அன்பினைப் புலவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறாக அஃறிணை உயிர்களின் வாழ்வியல் மூலம் அவற்றின் அன்பு, அக்கறை, அரவணைப்பு, பாசப்பிணைப்பு ஆகியவற்றை உயர்திணை மாந்தர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை இக்கட்டுரை இத்தலை முறையினரிடையே விதைக்க விளைந்துள்ளது.